
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 1 | நவம்பர் 1988 | இதழ் 11

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,**

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

ஜெபியுங்கள்! ஆயத்தமாகுங்கள்!! பங்குகொள்ளுங்கள்!!!

# புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் கருத்தரங்கம்

மற்றும்

# திருமறை ஆசான் முதல் ஆண்டு நிறைவு விழா

டிசம்பர் 29, 30–1988 (வியாழன். வெள்ளி)

இடம்: **ஈரோடு** (சரியான விலாசம் பின்னர் அறிவிக்கப் படும்)

நேரம்: பிரதி காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை

பொருள்: **வேதாகம அடிப்படையில் கிறிஸ்தவ ஒற்றுமை.**

—: அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் :—

✳ கலந்து கொள்ளும் எவருக்கும் தங்கள் கருத்தைத் தெரிவிக்க உரிமை உண்டு. இரண்டு தினங்களில் எல்லாருடைய கருத்தையும் கேட்க முடியுமா? ஆகவே கருத்துக்கூற விரும்பும் அனைவரும் எழுதிக்கொண்டு வருவது விரும்பத் தக்கது. வாய்ப்பு கிடைக்கா விட்டால் தங்கள் உடைய கருத்தை மலரில் வெளியிட்டு கௌரவிப்போம்.

✳ கண்டிப்பாக உரை நிகழ்த்த வேண்டும் என்று விரும்புவோருடைய ஆவலைப் பூர்த்தி செய்ய விழாக்குழு வாஞ்சிக்கிறது. தயவு செய்து விரைவில் உங்கள் விருப்பத்தை எழுதுங்கள். நிகழ்ச்சி நிரலை தயாரிக்க உதவியாக இருக்கும்.

✳ குடும்பமாக வருகிறவர்களுக்கு வசதி செய்து தரப் படும்.

உங்கள் ஒத்துழைப்பை நாடும்

கருத்தரங்கம் மற்றும் விழாக்குழுவினர்

# THIRUMARAI AASAAN

**Editor:**
**E. Z. SELVANAYAGAM**

**Honorary Editor**
**J. C. CHOATE**

**Published by Church of Christ**
**2, Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu. India**

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 1 November 1988 Issue 11

ஆசிரியவுரை

## கிறிஸ்தவ நோயாளிகள் மருந்து சாப்பிடலாமா?

இயேசு கிறிஸ்துவை வழிபடுவதாக சொல்லுகிற கூட்டத்தார் தங்களுடைய விசுவாசிகள் நோயுற்றால் மருத்துவ மனைகளுக்குச் செல்லக் கூடாது; மருத்துவ ஆலோசனை பெறக் கூடாது; மருந்து சாப்பிடக் கூடாது என்பர். அப்படிச் செய்தால் அவர்களை அற்ப விசுவாசிகள் என்று முத்திரை குத்தி அவர்கள் பரலோக இராஜ்ஜியத்துக்கு அருகதையற்றவர்கள் என்று கூறுகின்றனர். சகல நோய்களுக்கும் பாவமே காரணம் என்ற தவறான எண்ணத்தில் தான் அவர்கள் அப்படிக் கட்டுப்பாடு பண்ணுகிறார்கள் என்று தோன்றுகிறது. ஆனால் அது வேதாகம போதனைக்கு ஏற்ற கட்டுப்பாடல்ல.

ஒரு ஏழை, இந்து மதத்தைச் சேர்ந்தவர், அவருக்கு காச நோய் பிடித்த ஒரு குழந்தை, மூட நம்பிக்கையில் ஊறிப் போன அவர் இவர்களுடைய தவறான போதனைகளால் ஈர்க்கப்பட்டு, ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்து, இவர்களுடைய ஆலோசனையின்படி அக் குழந்தையை ஆலயத்தில் கிடத்தி ஒரு மாத காலமாகக் கத்திக் கூப்பாடு போட்டு ஜெபித்தனர், பாவம்! நோய் தீர்ந்த பாடில்லை, நம்பிக்கை இழந்த அந்த ஏழை மனிதன் குழந்தையின் மேல் உள்ள அன்பினால் மருத்துவ மனைக்காவது எடுத்துச் சென்றுபார்க்கலாம் என்று போதக-ரிடம் சொன்னார். போதகர் அவனை மடக்கி "உன் விசுவாசம் சோதிக்கப்படுகிறது; பொறுமையாயிரு" என்று அதட்டி, அவரை மருத்துவ மனைக்கு போக விடாமல் தடுத்து விட்டார். இரண்டொரு தினத்தில் குழந்தை இறந்து விட்டது, நிலைமை என்ன? இப்போது அந்த ஏழை மனிதன் இழந்தது குழந்தையை மட்டும்அல்ல; அவனுடைய விசுவாசத்தையும்தான்.

இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த போதகர் ஒருவரையும், இந்தக் கூட்டத்தில் முன்னேடியாக இருக்கிற ஒரு நண்பனையும் நான் அறிவேன். அவர்கள் தங்களுக்கும் தங்கள் உறவினர் ஒருவருக்கும் நோய் வந்த சமயங்களில் வெளியூரில் உள்ள பிரபலமான மருத்துவ மனைகளுக்குச் சென்று வைத்தியம் பார்த்து அறுவைச் சிகிச்சையும் செய்து கொண்டு நன்ருக இருக்கிருர்கள். அல்லேலுயா! அப்படிப்பட்டவர்கள் மற்றவர்களை இப்படித் தவருன வழியில் நடத்திச் செல்லுவது ஏன் என்று தெரியவில்லை.

ஒரு கிறிஸ்தவனுடைய சரீர வாழ்க்கையில் நோயோ, வேதனையோ ஏமாற்றமோ வருவது தவறல்ல. அது இறைவனின் கோபத்தாலோ, சாபத்தாலோ, அல்லது அவன் அல்லது அவனுடைய பெற்ரேர் செய்த பெரும் பாவத்தினலோ வந்தது என்று தீர்மானிப்பதும் சரி அல்ல. நூற்றுக்கு நூறு அப்படியல்ல, ஆனல் சில பல வியாதிகள் அப்படியும் வருவது உண்டு. யோவான் சுவிசேஷம் ஒன்பதாம் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களிலும். பதினேரும் அதிகாரம் நான்காம் வசனத்திலும் விவரிக்கப்பட்டுள்ள பிறவிக் குருட்டுத் தன்மையும், லாசருவின் வியாதியும் தேவ மகிமை விளங்குவதற்கு ஏதுவாக இருக்கின்றன என்று சொல்லுகிருர் இயேசு. பழைய எற்பாட்டில் யோபு நீதிமான் என்றும், என் தாசன் என்றும், தேவன் நற்சான்று வழங்கியிருக்கிருர். அவன் கூட தொழு நோயால் பாதிக்கும்படி சூழ் நிலை ஏற்பட்டது. ஆகையால் எல்லா நோய்களுக்கும் பாவம் தான் காரணம் என்று தவருக நினைத்துக் கொண்டு அலட்டிக் கொள்ளக் கூடாது.

வியாதியும், துன்பமும் பலவீனமும் ஓர் கிறிஸ்தவனுக்கு பாவத்தினலும், விசுவாசக் குறைவினலும் தான் ஏற்படுகிறது என்று நம்பும் இக் கூட்டத்தார் தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலன் பவுல் எழுதின அறிவுரையை ஒரு போதும் வாசித்ததில்லையா? நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல் உன் வயிற்றுக்காகவும் உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் ''திராட்சை இரசமும் கூட்டிக் கொள்'' என்கிருர். 1 தீமோ. 5:23 கர்த்தருடைய ஊழியக்காரன் எப்பாப்பிரோதீத்து மரணத்துக்கு சமீபமாயிருந்தான் என்று குணமாக்கும் வரம் பெற்ற பவுலே கூறுகிருர், பிலி 2:25-27 ஏன் அவரே கூட தனக்கு இருக்கும் முள்ளைப்பற்றியும், பலவீனத்தைப் பற்றியும் குறிப்பிடுகிருர் 2 கொரி 12:7-10. அப்படியானல் அப்போஸ்தலனகிய பவுலேயும், தீமோத்தேயுவையும் எப்பாப்பிராதீத்துவையும் பாவிகள் என்றும் அற்ப விசுவாசிகள் என்றும் கூறுவார்களா?

இவைகளையெல்லாம் சிந்திக்கும்போது, நோய் வாய்ப்படுவதும், அவற்றிலிருந்து நிவாரணம் பெற கிறிஸ்தவர்கள் மருத்துவர்களுடைய உதவியை நாடுவதும் தேவ சித்தத்துக்கோ, விசுவாசத்துக்கோ முரணனது அல்ல. இறைவன் தந்த அறிவைக் கொண்டு மருத்துவம் படித்து, நோய் பற்றிய நுணுக்கங்களை ஆராய்ந்து இறைவன் படைத்த

மூலிகைகள், தாவர வர்க்கங்கள் ஆகியவைகளைக் கொண்டும், இரசாயனப் பொருட்களைக்கொண்டும், மருந்து மாத்திரைகளைக் கண்டு பிடித்து மக்களுடைய வியாதிகளைத் தீர்ப்பது தவறு என்றால் விஞ்ஞான வளர்ச்சியில் சகல துறைகளிலும் ஏற்பட்டிருக்கும் பலவிதமான சௌகரியங்களை மனிதர்கள் பயன் படுத்துவது எவ்வாறு நியாயம்? சிந்திப்பீர்!

இப்படி நாம் சொல்லும் போது யாக்கோபு நிருபத்தில் "ஒருவன் வியாதிப்பட்டால் எண்ணெய் பூசி ஜெபம் செய்ய வேண்டும் என்று தானே சொல்லியிருக்கிறது. மருந்து சாப்பிடு என்று சொல்லியிருக் கிறதா? என்று வாதிடுவர், தயவுகூர்ந்து யாக்கோபு 5:13 18 வரை உள்ள வசனப் பகுதிகளை கவனமாய் வாசித்துப் பாருங்கள். 'சபையின் மூப்பர் களை வரவழைப்பானாக' வ:14 ஆலயத்துக்கு எடுத்துக் கொண்டு போ, அங்கே வரம் பெற்ற ஊழியரைக் கொண்டு ஜெபி என்று கூறவில்லை. மேலும் எண்ணெய் பூசி என்பதின் பொருள் என்ன? சீசா பாட்டிலில் எண்ணெயைக் கொண்டு போய் அதை (மந்திரித்து) ஜெபித்து என்று பொருள் அல்ல, இது வாய்க்கால் மேட்டில் விஷ கடிக்கும், வேறு சில வியாதிகளுக்கும் தண்ணீர் மந்திரித்துத் தருகிறானே சாலையோர சாமி யார்-அவனிடத்திலிருந்து காப்பியடித்த செயல்; வேதாகம போதனை அல்ல.

அந் நாட்களில், தற்காலத்தில் இருப்பதைப் போன்று மருத்துவ விஞ்ஞானம் அவ்வளவு வளர்ந்திருக்கவில்லை, நமது ஊர்ப் பாட்டிமார் கள் அந்தக் காலத்தில் ஏதாவது நோய், புண் என்றால் உடனே தேங்காய் எண்ணெய்ப் பத்து ஒன்று போட்டு வைப்பார்கள், அதே- போல் இயேசு வாழ்ந்த பாலஸ்தீனா நாட்டிலும் அந்த நாட்களில் ஒலிவ எண்ணெய் சகல நோய் நிவாரணியாகக் கருதப்பட்டது. ஆகவே அப்படிச் செய்து, ஜெபித்து, கர்த்தருடைய சித்தத்துக்கு விட்டு விடுங் கள் என்று பொருள், நல்ல சமாரியன் உவமையில் கூட "அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சை இரசமும் வார்த்து................" லூக் 10;34 என்று குறிப்பிட்டிருப்பதைக் கவனியுங்கள். பழைய ஏற்பாட்டில் எசேக்கியாவின் நோய் குணமாக்கப்படுவதற்கு அத்திப் பழ அடையைக் கொண்டு வந்து பிளவையின் மேல் பற்றுப் போடுங்கள்; அப்பொழுது பிழைப்பார் என்று ஏசாயா தீர்க்கன் சொல்லவில்லையா? ஆகவே ஒருவன் வியாதியிலிருந்து குணமாக்கப்படுவதற்கு மருந்தும் தேவை, தேவ ஒத்தாசையும் அனுக்கிரகமும் தேவை,

ஒரு கிறிஸ்தவ மருத்துவ மனையில் கீழ்க்கண்ட வாசகம் எழுதப் பட்ட ஒரு அட்டை இருந்தது 'We dress, God heals' எவ்வளவு உண்மை.

E. Z. செல்வநாயகம்.

# கிறிஸ்தவர்கள் ஏன் பின் வாங்கிப் போகிறார்கள்?

மக்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்ளும் போது நமக்கு ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஏனெனில் அதன் மூலமாக அவர்களுடைய திரளான பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக மாறி கிறிஸ்துவுக்குள் சகோதரர்களாகவும், சகோதரிகளாகவும் ஆகி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்கிறார்கள். கர்த்தர் அவர்களோடு இருந்து ஆசீர்வதித்துக் காத்துக் கொள்வார் என்று வேதாகமம் கூறுகிறது ஆனால் மேற்கூறிய நிலையை அடைவதற்கு நாமும் சில பொறுப்புகளை நிறைவேற்றவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். ஆம், நாம் உண்மையுள்ளவர்களாகவும், கொள்கைப் பிடிப்பு உள்ளவர்களாகவும், கீழ்ப்படிதல் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் நிறைவேற்றவேண்டிய பொறுப்புகளை, அவர் அருளும் ஆசீர்வாதத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால் மிகமிகச் சொற்பம். உதாரணமாக ஒருவர் நமக்கு இனாமாக நூறு ரூபாய்க்கான காசோலை ஒன்றை எழுதிக் கொடுக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்தக் காசோலையை வங்கிக்கு எடுத்துச் சென்று தான் பணமாகப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் அந்தச் சிறு பணியே நாம் நூறு ரூபாய் சம்பாதிப்பதற்குப் போதிய உழைப்பாகி விடுமா?

இரட்சிப்புப் பற்றியும் கிறிஸ்துவுக்குள் நமக்குக் கிடைக்கும் சகல ஆசீர்வாதங்களைப் பற்றியும் வேதாகமம் கூறுகிறவைகளை நாம் உற்றுக் கவனிக்கும் போது, எப்படித்தான் கிறிஸ்தவ மக்கள் மனம் துணிந்து கிறிஸ்துவை மறுதலித்துப் பின்வாங்கிப் போகிறார்கள் என்பது ஆச்சரியமாகவும், வருத்தமாகவும் இருக்கிறது. ஆனால் அப்படிச் செய்கிறவர்களை நாம் பார்த்துக் கொண்டும், கேள்விப்பட்டுக்கொண்டும் இருக்கிறோம். அவர்கள் கிறிஸ்துவை விட்டுப் பின் வாங்கிப் போகும்படி அவர்களை அலைக்கழிக்கிற சூழ்நிலைகள் என்ன என்பதைச் சற்றே ஆராய்ந்து பார்ப்போம். அப்பொழுது அச்சூழ்நிலைகளிலிருந்து அவர்களில் சிலரையாவது மீட்கவும், சிலரை அவ்வித சூழ்நிலைகளுக்குள் செல்லாதபடி தடுத்து நிறுத்தவும் உதவுமல்லவா?

1. இரட்சிப்புக்கேற்ற தேவனுடைய வசனங்களைச் சரியாகக் கற்றுக் கொடுக்காமல் வெறுமனே திருமுழுக்குச் செய்வித்து கிறிஸ்தவனாக்கி விடுவது ஒரு காரணம். கிறிஸ்து யார்? அவர் எதற்காக இந்த உலகத்துக்கு வந்தார்? அவருக்கும் நமக்கும் உள்ள தொடர்பு யாது? நான் ஏன் அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவருடைய உபதேசச் சட்டத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று தெரியாத ஒருவன் கிறிஸ்துவுக்குப் பிரியமான வாழ்வு வாழ வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பது எப்படி? 'விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய

வசனத்தினாலே வரும்' என்கிறார் பவுல் (ரோமர் 10:17) எபிரேய நிருப ஆசிரியர், 'விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவ ரென்றும் 'விசுவாசிக்கவேண்டும் என்று சொல்லுகிறார் எபி. 11:6.

விதைக்கிறவன் உவமையில் இயேசு 'சில விதைகள் அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது. மண் ஆழமாயிரா-தத்தினாலே அது அதிசீக்கிரமாய் முளைத்தது. வெயில் ஏறினபோதோ தீய்ந்துபோய் வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று' என்கிறார் மத் 13:5,6. அந்த உவமையின் கருத்தை விளக்கும்போது' கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன் வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்கிறவன். ஆகிலும் தனக்குள்ளே வேர் இல்லாதவனாய், கொஞ்ச காலம் மாத்திரம் நிலைத்திருப்பான். வசனத்தினிமித்தம் உபத்திரவமும், துன்பமும் உண்டானவுடனே இடறல் அடைவான்' என்கிறார் மத். 13:20,21. சத்தியத்தைக் கேட்கிற மக்கள் அதை முழுமையாகப் புரிந்து கொள்ளாமலும், விசுவாசியாமலும் இருக்கும்போது சீஷத்துவத்தின் விலையைக் கொடுக்க விரும்பமாட்டார்கள். அவர்கள் கிறிஸ்துவினிமித்தம் சிலவற்றைத் துறக்கவேண்டும் என்ற நிலை வந்தாலோ பின் வாங்கி விடுவார்கள்.

2. இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தனிமையில் இருந்தாலோ, சபை கூடி வருகிற வாய்ப்பு அற்ற சூழ்நிலைகளில் இருந்தாலோ அல்லது உற்சாகப்படுத்தக் கூடிய ஊழியரும் விசுவாசி-களும் இல்லாத சிறிய சபையாக இருந்தாலும் கூட பின் வாங்கிப் போவார்கள். புதிதாக கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு சத்தியத்தை நன்கு எடுத்து விளக்கிக் கூறி அதில் தேர்ச்சியடைச் செய்யாமல் விட்டு விட்டாலும் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் மரண பரியந்தம் விசுவாசமாக இருப்பது அவசியம் என்பதை உணர்த்தா விட்டாலும் இவ்விதமான அபாயங்கள் வரும் ஆகையால் தான் சபை கூடிவருதலை விட்டுவிடக் கூடாது என்றும், வேதஆராய்ச்சி வகுப்புகளில் கலந்து கொள்ள வேண்டும் என்றும், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி உற்சாகப்படுத்த வேண்டும்.

இவ்விதமாய் நாம் செய்து, ஒருவரால் ஒருவர் உற்சாகப்படுத்தப் பட்டு, நல்ல பல திட்டங்களைப் போட்டு நிறைவேற்றி ஆவியில் அனல் கொள்ளச் செய்து விசுவாசத்திலும் எண்ணிக்கையிலும் வளரப் பாடுபடவேண்டும். சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டபொழுது 'அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும்' அந்நியோந்நியத்-திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபத்திலும் உறுதியாய்த் தரித்திருந்-தார்கள்' என்று அப். 2:42. கூறுகிற காரியத்தைச் சிந்தியுங்கள்.

3. பல கிறிஸ்தவர்கள் உலகிய்ல் கோட்பாடுகளில் மயங்கிப் பின் வாங்கிப் போகிறார்கள். கிறிஸ்துவை அறியாத நண்பர்களும், தீய வழிகளில் செல்லுகிற கூட்டாளிகளும், தேவனுடைய பிள்ளைகளையும் அவர்கள் வழிக்கு இழுத்துக் கொள்ளுவார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களைக் கேலி செய்வார்கள். அவர்கள் பின்பற்றும் துன்மார்க்க உளையில் அவர்களோடே கூட விழாமல் இருக்கிறதினாலே அவர்கள் தூஷிப்பார்கள். அவர்களுடைய மதியீனமான வாதங்களை முறியடித்து, சத்தியத்தின் வழியை அவர்களுக்குப் போதிப்பதற்குப் பதிலாக அவர்களிடத்தில் மடங்கி விடுவார்கள். இப்படிப்பட்ட கிறிஸ்தவர்களை முள்ளுள்ள இடங்களில் விழுந்த விதைகளுக்கு ஒப்பிடலாம். இவர்கள் உலகக் கவலைகள், ஐஸ்வரியத்தின் மயக்கம், கூடா நட்பு, ஆகியவைகளால் நெருக்கப்பட்டு கனி கொடுக்கமுடியாத, கிறிஸ்தவர்களாகிவிடுகிறார்கள்.

4. இன்னும் சிலர் தங்கள் விருப்பத்தை நிறைவு செய்யக்கூடிய தவறான உபதேசங்களுக்குச் செவி சாய்த்து, சத்தியத்தை விட்டுவிலகிப் போகிறார்கள். ஏற்கனவே இருக்கிற கள்ள உபதேசங்கள் போதாது என்று தற்காலத்தில் புதிது புதிதாக முளைத்துக் கிளம்புகிற கள்ள போதகர்கள், வித்தியாசமான உபதேசங்களைக் கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினார் என்று கூறிக்கொண்டு தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சித்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட காரியங்களைக்குறித்து வேதம் நம்மை பல சந்தர்ப்பங்களில் எச்சரிக்கிறது... 'ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்' எபே 5:6. எரே 29:8,9; 14:14; 23:16. அப் 20:28-31.

5. இறுதியாக, தாங்கள் சொன்னபடி தான் நடைபெற வேண்டும், மற்றவர்கள் தங்களைவிட எத்துறையிலும் அதிக ஆசீர்வாதமுள்ளவர்களாக இருந்தால் பொறாமையும், எரிச்சலும் அடைந்து சதி செய்து கவிழ்த்துப்போட வேண்டும் என்ற அற்ப புத்தி உள்ளவர்களும் உண்டு. அப்படிப்பட்டவர்கள் சின்னச் சின்ன விஷயங்களைக்கூட பெரிதுபடுத்தி, ஆர்ப்பாட்டம் செய்து அசிங்கப்படுத்தி விடுவார்கள். இவர்கள் யோவான் எழுதிய மூன்றாம் நிருபத்தில் வருகிற தியோத்திரேப்பு என்ற மனிதனின் பங்காளிகள் (3 யோவான் 9.) கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எப்படிப்பட்ட மனப்பான்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை விளக்கி ரோமருக்கு எழுதின நிருபத்தில் கீழ்வருவருமாறு எழுதுகிறார். 'ஒருவரோடொருவர் ஏக சிந்தையுள்ளவர்களாயிருங்கள். மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல் தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள். உங்களையே புத்திமான்கள் என்று எண்ணாதிருங்கள் ரோமர் 12:16.

இன்னும் எத்தனை எத்தனையோ காரணங்களினாலே தேவனுடைய பிள்ளைகள் பாதை தடுமாறி வழுக்கி விழுந்துவிடுகிறார்கள். காரணம் எதுவாக இருந்தாலும் அதற்கு மன்னிப்பு இல்லை. அவரை விட்டுப் பின்

வாங்குகிற எவனும் ஞானமுள்ளவன் அல்ல. அவர்கள் கிறிஸ்துவின் ஐக்கியத்தை மட்டும் அல்ல, அவரால் கிடைக்கும் சகலவிதமான நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் இழந்து போகிறார்கள், மறுமையைப் பற்றிய நம்பிக்கையையும் இழந்து போகிறார்கள். இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்து மனம் திரும்பி, தங்கள் தவறுகளை அறிக்கையிட்டு கர்த்தரிடத்திலும், சகோதரர்களிடத்திலும் மன்னிப்புப் பெற்றுக் கொள்ள முடியும். யாக் 5:16. ஆனால் அவ்விதமான வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளாமல் பிடிவாதமாக, நிர்விசாரமாக இருப்பதைப் பார்த்து துக்கமடைகிறோம். இவர்கள் ஏசாவின் வாழ்க்கையை நினைவு கூர்ந்தால்தெளிவு பெறக்கூடும். எபி 11:16-17.

சிலர் சபை எனக்குத் தேவையில்லை, கிறிஸ்து போதும் என்று சபையையும் கிறிஸ்துவையும் வேறுபடுத்திப் பேசுவார்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார் எபே 5:23. நாம் (கிறிஸ்தவர்கள்) எல்லோரும் கிறிஸ்துவின சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயிருக்கிறோம். 1 கொரி 12:27. அப்படியிருக்க கிறிஸ்துவாகிய தலையோடு இணைக்கப்பட்டுள்ள சபையாகிய சரீரத்தில் அங்கம் வகிக்காமல் துண்டிக்கப்பட்டிருக்கும் ஒருவன், கிறிஸ்துவோடு தொடர்பு உண்டு என்று கூறுவது எப்படி? அப்படிப்பட்டவர்களுடைய சிந்தனையிலுள்ள தவறை எண்ணிப்பாருங்கள். நீங்கள் கிறிஸ்தவர்கள் என்றால் சரீரமாகிய சபையில் அங்கம் வகித்து கிறிஸ்துவோடு ஐக்கியம் கொண்டு விசுவாசமாயிருங்கள், கர்த்தரை ஆவியோடும், உண்மையோடும் தொழுங்கள். உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் தேவன் வைத்திருக்கிற ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்

J. C. சோட்

---

## தேவனுடைய வசனத்தை வாசித்து தியானிப்பதினால் ஏற்படும் நன்மைகள்

பொதுவாக அவைகளால் ஞானத்தையும், போதகத்தையும் அறிந்து புத்திமதிகளை உணர்ந்து விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப்பற்றிய உபதேசத்தை அடையலாம்.

இவைகள் சமுதாயத்தில் இருக்கிற அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அவரவர்களுடைய அறிவுக்கும் நிலைக்கும் ஏற்றபடி வாழ்க்கைக்குப் பயன் உள்ளவைகளைத் தருகிறது.

பேதைகளுக்கு:— சிந்தனைத் தெளிவைக் கொடுக்கும்.

வாலிபர்களுக்கு:— அறிவையும் விவேகத்தையும் தரும்

புத்திமான்:— மேலும் அறிவில் தேறும் நிலையை அடைவான்

விவேகி:— நல்ல ஆலோசனைகளை அடைந்து நீதி மொழிகளையும், அதன் அர்த்தத்தையும் ஞானிகளின் வாக்கியங்களையும் அவர்கள் உரைத்த புதை பொருள்களையும் அறிந்து கொள்வான்.

# மரித்தவர்கள் எங்கே?

இளைஞரையும் முதியவர்களையும் சிந்திக்கத் தூண்டும் ஒரு கேள்வியை விவாதிக்க விரும்புகிறேன். 'மரித்தவர்கள் எங்கே'? மனிதன் இருதன்மையுள்ளவன். சரீரம் மற்றும் ஆத்துமாவாலானவன். தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். (ஆதி 2:7). சரீரம் தற்காலிகமானது; ஆனால் ஆத்துமாவோ நித்தியமானது. சரீரம் மரித்து கெட்டுபோகிறது; ஆனால் ஆத்துமாவோ நித்தியமாய் வாழ்கிறது.

மரணத்தினால் சரீரத்திற்கு என்ன சம்பவிக்கிறது என்பதல்ல, ஆத்துமாவுக்கு என்ன நேருகிறது என்பதே நமது அக்கரை, கரிசனை, ஆத்துமா எங்கு செல்கிறது? அது நிச்சயம் கல்லறைக்குள் செல்வதில்லை. ஆவி சரீரத்திலிருந்து பிரிந்து விடுகிறதென்பதும், சரீரம் மட்டும் கல்லறைக் குழிக்குள் செல்கிறதென்பது வெளிப்படை (யாக் 2:26,)

ஆத்துமா உத்தரிப்பு ஸ்தலத்திற்கு (இடை நிலை நிவர்த்தி ஸ்தலம்) செல்வதில்லை. பாவம் செய்த ஆத்துமா நிவர்த்தி ஸ்தலத்திற்கு சென்று சில காலம் தண்டனை அனுபவித்த பின்பு, அந்த இருளை விட்டு நீங்கி, பரிசுத்த மடைந்து நரகத்திற்கு தப்புகிறது என்பது ஒரு மூடநம்பிக்கை.

நகைப் பிறக்கிடமான இப்படிப்பட்ட ஒரு பதவிஉயர்வு மற்றும் இடமாற்றத்தை கற்பனை செய்பவர்கள் ஏமாற்றுவித்தை கற்றவர்கள். பாதாளத்தில் தண்டனையடைந்துள்ள ஆத்துமாவை பூமியிலுள்ள பாதிரிகள் விடுவித்து பரலோகம் அனுப்பி விட முடியும் என்பது பாதிரிகளைப் பாமர மக்கள் மதிக்க வேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்ட அற்பாசை கொண்ட மோசடி வேலையாகும். வேதத்தில் இதற்கான எந்தவித சிறு தடயமும் இல்லை. மரணத்தின்போது ஆத்துமா நேரடியாக பரலோகத்திற்கோ அல்ல நரகத்திற்கோ செல்வதில்லை.

சிலுவை மரணத்திற்கு சற்று முன்னர், இயேசு, தன் பாவ நிலையை உணர்ந்த கள்வனை நோக்கி '' இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன் என்றார்' (லூக் 23;45) உணர்த்தப்பட்ட கள்ளன் அன்று பரதீசு செல்வதாக சொன்னார். ஆனால், மூன்று நாட்கள் கழித்து, வாரத்தின் முதல் நாள் காலையில். இயேசு மதலேனா மரியாளுக்கு தோட்டத்தில் தரிசனமாகி, 'என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை' என்றார் (யோவா 20;17) வெள்ளிக்கிழமையன்று இயேசுவும் கள்ளனும் பரதீசுக்கு சென்றார்கள். ஆனால் வாரத்தின் முதல் நாளில் இயேசு தான் இன்னும் பிதாவினிடத்திற்கு ஏறி போகவில்லை. என்கிறார் ஆகவே, பரதீசு என்பது தேவன் வாசம் செய்யும் பரலோகம் அல்ல. என்பது தெளிவாகிறது.

பரதீசு என்றால் என்ன? இயேசுவின் மரணத்தின் போது அவருடைய ஆத்துமா எங்கு சென்றதென்பதை அறிவோமானால், பதிலையும் அறிவோம், அப்போஸ்தலர் 2:26-27 இல், பேதுரு இயேசு உயிர்த்தெழுதலைக் குறித்த தாவீதின் தீர்க்கதரிசனத்தைக்குறிப்பிடுகிறார். யாக்கோபு அரசன் ஆங்கில மொழிபெயர்ப்பு வேதாகமத்தில், நரகம் (சங் 16:10) என்று சொல்லப்படுவது பாதாளத்தைத் தான் குறிக்கிறது. பாதாளம் என்பது பிரிந்து போன ஆவிகள் உலகம். இயேசுவும் கள்ளனும் காணக் கூடாத ஆவிகள் உலகத்திற்கு (பாதாளம்) போனார்கள், அங்கேதான் பரதீசு அமைந்துள்ளது.

இந்த ஆவி உலகம் எப்படி இருக்கும்?

இது பற்றிய வேத வசன பகுதி ஏதேனும் உண்டா? ஆம்: உண்டு என்று சொல்லுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். லூக்கா 16—ஆம் அதிகாரத்தில், லாசரு மரித்து ஆபிரகாமின் மடியில் கொண்டு போய் விடப்பட்டான், செல்வந்தனும் மரித்து, பாதாளத்தில் தன் கண்களை ஏறெடுத்து பார்த்தான். செல்வந்தன், ஆபிரகாமிடத்தில், லாசருவை அனுப்பி அவன் தன் விரலின் நுனியை தண்ணீரில் தேய்த்து தன் நாவை குளிரப்பண்ணச் செய்யும்படி கெஞ்சினான். ஆனால் ஆபிரகாமோ இடையே உள்ள பெரும் பிளப்பினால் இது சாத்தியமில்லை. என்பதை விளக்கினான். பின்பு அவன் ஆபிரகாமிடத்தில் பூமியிலுள்ள தன் சகோதரரை எச்சரிக்கை செய்ய லாசருவை அனுப்பும்படி வேண்டினான். ஆனால் ஆபிரகாமோ அவர்களை எச்சரிக்க மோசேயும் தீர்க்கதரிசிகளும் அங்கேஇருக்கிறார்கள் என்றான். மேற்கூறியவற்றிலிருந்து, ஆவிசரீரத்தை விட்டு பிரியும் போது, சரீரம் பிரேத குழியில் போகிறதென்பதையும், ஆவியானது காணக் கூடாத ஆவிகள் உலகத்திற்கு செல்கிறதென் பதையும் அறிகிறோம். நீதிமான் பரதீசு அல்லது ஆபிராகாமின் மடி என்ற இடத்திற்கும் துன்மார்க்கன் பாதாளத்திற்கும் போகிறார்கள். இந்த இரண்டு இடங்களையும் ஒரு பெரிய பிளப்பு பிரிக்கிறது. சரீரத்தை விட்டுப் பிரிந்து போன இந்த ஆவிகள் ஒன்றை மற்றொன்று அங்கே இனங்கண்டு கொள்ளும். பூமியில் சம்பவிப்பதையும் அங்கிருந்தவாறே அறிந்து கொள்ளும்,

நியாயத் தீர்ப்பு நிகழாமலிருந்தாலும் பூமியின் வாழ்க்கை தொடர்ந்து நடைபெற்றாலும் செல்வந்தன் லாசரு ஆகியோருடைய மேற் சொன்ன நிலை நித்தியத்தைக் குறிக்காது என்பதை அறிவோம், கிறிஸ்துவின் காலத்திற்கு முன்பு இது நிகழ்ந்தது. அவனுடைய ஐந்து சகோதரரும் பூமியிலுள்ள மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவி கொடுக்கட்டும் என்று ஆபிரகாம் சொன்னான்.

கிறிஸ்துவின் யுகம் அப்போது துவங்கி, நடப்பிலிருந்திருந்தால், அவர்களுக்கு 'கிறிஸ்துவும் அப்போஸ்தலரும் இருக்கிறார்கள். அவர்கள் அவர்களுக்கு செவி கொடுக்கட்டும்' என்று சொல்லியிருப்பார்.

இவைகளெல்லாம் உண்மையென்றால் பின் நியாயத் தீர்ப்பின் அவசியம் தான் என்ன? என்று ஒரு சிலர் வினவலாம். தேவன் நியாயம் விசாரிக்கு முன்னால் தண்டிக்கிறேன். அல்லது விடுவிக்கிறேன் என்று தீர்ப்பு கூறுவார் என நாம் யூகிக்க கூடாது.

நமது வாழ்க்கை வழக்குஇப்போது விசாரணையிலிருக்கிறது. நாம் மரிக்கும் போது, நமது நித்தியத்தை பற்றிய தீர்ப்பு நிலை தவிர்க்க முடியாததாகிறது. நியாயத் தீர்ப்பின் போது, நியாயாதிபதியாகிய இயேசு கிறிஸ்து இறுதி தீர்ப்பை முறையாக அறிவிப்பார்.

(மத் 25: 34, 41, 46; அப் 17:21.

நீதிமான் நித்தியத்திற்கும் தேவனோடிருக்கும்படி பரலோகம் போவான். இழந்து போன துன்மார்க்கனோ பிசாசுக்காவும் அவன் தூதருக்காகவும் உண்டாக்கப்பட்ட நித்திய நரகத்திற்கு போவான்! நீங்கள் எங்கு போவீர்கள்? முடிவை சந்திக்க நீங்கள் ஆயத்தமா? உங்கள் நித்தியத்தை நீங்கள் எங்கு கழிப்பீர்கள்? இன்றே தீர்மானியுங்கள்! ராஜா 18:21 யோசுவா 24:15)

ராய் பீஸ்லி — P. பால்ராஜ்

## தந்தை சொல் மிக்க மந்திரமில்லை

1. என் மகனே, என் போதகத்தை மறவாதே; உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக்கடவது.

2. அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகப்பண்ணும்.

3. கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள்.

4. அதினால் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் தயையும் நற்புத்தியும் பெறுவாய்.

5. உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.

6. நீ உன்னை ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்கு பயந்து, தீமையை விட்டு விலகு.

7. அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்புகளுக்கு ஊனுமாகும்.

# இரண்டு உடன்படிக்கைகள்.

தேவனுடைய வார்த்தையைப் பகுத்துப்படித்து, பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்று உணராததினால் சிலர் கிறிஸ்தவர்கள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணுகிறார்கள், இதன் விளைவாக அநேக மார்க்க பேதங்கள் தோன்றி கிறிஸ்தவத்தின் சிறப்பை பாழ்படுத்திக் கொண்டு இருக்கிறது.

உடன்படிக்கை என்றால் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுவினரிடையே சில காரியங்களைச் செய்யும்படிக்கு அல்லது செய்யாதிருக்கும்படிக்கு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் என்று பொருள். பழைய உடன்படிக்கை தேவனுக்கும், இஸ்ரவேலர் என்ற ஒரு நாட்டவருக்கும் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம். புதிய உடன்படிக்கை தேவனுக்கும், உலகில் வாழும் ஒவ்வொரு தனி நபருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம்.

பழைய உடன்படிக்கை :-

இது தேவனுக்கும் இஸ்ரவேலருக்கும் இடையே, இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி வந்த பொழுது சீனாய் மலையில் மோசேயின் மூலமாகச் செய்யப்பட்டது.

யாத் 10:1-5, 24:1-8.

இது எகிப்தில் அடிமைகளாக இருந்து பின்னர் ஒரு நாடாக மலர்ந்த இஸ்ரவேலரை ஆள்வதற்கு தேவனால் மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்ட தேச சட்டம். யாத் 20:1, 2; 31; 12-18; 34-27, உபா 5:1-3. இதில் மற்ற இனத்தவர் சேர்க்கப்படவில்லை. இது ஒரு குறிப்பிட்ட இன மக்களுக்காக ஓர் குறிப்பிட்ட காலத்திற்கு கொடுக்கப்பட்டது. கலா 3:19 ''சந்ததி வருமளவும்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவைக் குறிக்கிறது. கலா 3:16 அப்படியானால் கிறிஸ்து வந்து விட்ட பிறகு நியாயப்பிரமாணத்தின் நோக்கம் நிறைவேறி விடுகிறது. பழைய ஏற்பாட்டுச் சட்ட திட்டங்கள் எடுபட்டுப் போயிற்று கொலோ. 2: 14.

ஆயினும் இன்னும் பழைய உடன்படிக்கையின்படி ஓய்வு நாளை ஆசரிக்கிறவர்கள் 'நீதிச் சட்டங்கள்' சடங்காச்சார சட்டங்கள்' என்று தேவன் வேறுபடுத்தாததை இவர்கள் வேறு படுத்திக் கொண்டு பத்துக் கட்டளைகள் நீக்கப்பட்ட சட்டத்தின் ஒரு பகுதி அல்ல என்று தவறாக எண்ணிக் கொண்டு, தாங்கள் குழம்புவதும் அல்லாமல் மற்றவர்களையும் குழப்புகிறார்கள் ஆனால் பத்துக் கற்பனைகளையும் கர்த்தர்; 'உடன் படிக்கை' என்றே குறிப்பிடுகிறார்.

யாத் 34; 27, 28, உபா 4:13; 9;9-11; 1. ராஜா 8:9, 21.

உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டு நீக்கப்பட்டு விட்டது என்று சொல்லும் போது, பத்துக் கற்பனைகள் அடங்கிய உடன்படிக்கையின் கீழே கிறிஸ்தவர்கள் வாழ வேண்டியதில்லை என்றே பொருள்.

**பழைய உடன்படிக்கை நீக்கப்படுதல் :—**

''புதிய உடன்படிக்கையை'' உண்டாக்குவேன் என்று எரேமியா மூலம் தேவன் உரைத்தார் எரே 31 : 31 - 34. இது '' புதிய உடன்படிக்கை'', எல்லோரும் '' தேவனை அறிந்திருப்பார்கள் '', ''பாவங்கள் நினைக்கப்படுவதில்லை''. என்று மேற்கூறிய வசனங்கள் சொல்லுகின்றன. முதலாவது, உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக இயேசு இவ்வுலகிற்கு வந்தார். மத் 5: 17, 18. அதை அவர் நிறைவேற்றினார். யோவான் 19:28-30, முதலாம் உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டு அது நீக்கப்பட்டது என்று பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதிய பவுல் உறுதி செய்கிறார். எபே 2:14-17. இப்பொழுது புதிய உடன்படிக்கையின் கீழ் கிறிஸ்தவர்கள்இல்லை என்றுபவுல்சாட்சியிடுகிறார் ரோமர். 6:14-15 கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்துக்குக் கட்டுப்பட்டவர்களல்ல. ரோமர். 7:4. யூதர்களாக இருந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களே நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பவுல் சொல்லுகிறார் என்றால் (ரோமர் 8:6.) புறஜாதிகளாகிய நாம் நியாயப்பிரமாணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது தேவையில்லாதது. மேலும், பத்து கட்டளைகள், ஒழிக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தில் இல்லை என்று கூறுவாரே! 'இச்சியாதிருப்பாயாக' என்பது பத்து கட்டளையின் ஒரு பகுதியா? இல்லையா? (ரோமர். 7:7.) மேலும் 2 கொரி 3,6,7 'எழுத்துக்களினால் எழுதப்பட்டு கற்களில் பதிந்திருந்த' என்று கூறுகிறாரே, கற்களில் பதிக்கப்பட்டது எந்தக் கற்பனைகள்? பத்துக் கற்பனைகள் தானே கற்பலகைகளில் பதிக்கப்பட்டு மோசேயிடம் கொடுக்கப்பட்டது. யாத் 31:18; 24:12; 34:7, 28.

**புதிய உடன்படிக்கை-கிறிஸ்துவின் சுவிசேஷம் :-**

வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் இயேசுகிறிஸ்வுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது மத். 28;18-20. ஆக எல்லா நாட்டவரும் இனத்தவரும் புதிய உடன்படிக்கையின் கீழ் வருகின்றனர். மாற். 16:15; 16; லூக் 24:46-48. இந்தப் புதிய உடன்படிக்கை திடீரென்று முளைத்ததல்ல; ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குறுதியின் நிறைவேற்றமே என்பதை, கள்ளப் போதகத்தால் வஞ்சிக்கப்பட்ட கலாத்திய சபையாருக்கு அப்போஸ்தலனாகிய பவுல் ஆதாரத்தோடே எடுத்துக் கூறுகிற அறிவுரை தயவு செய்து நாமும் ஜெபத்துடன் வாசித்துத் தெளிவு பெறுவோம். கலா 3:6-29. இதன் அடிப்படையில் கிறிஸ்துவை இரட்சகர் என்று ஏற்றுக் கொள்ளுகிற அனைவரும் 'புது சிருஷ்டியாய்' இருக்கிறார்கள். 2 கொரி 5:7. பழைய உடன்படிக்கை

யினாலேயல்ல. புதிய உடன்படிக்கையினாலேயே பாவிகள் தேவனிடத்தில் சேருகிறார்கள். இந்தப் புதிய உடன்படிக்கையினாலேயே, கிறிஸ்துவின் இரத்தத்தினால் வரும் தேவ வாக்குத்தத்தங்கள் நிறைவேறுகிறது.

ஆகவே, பழைய இரசத்தைப் புதிய துருத்தியில் வார்த்து, துருத்தியும் கிழிந்து இரசமும் சிந்திச் சேதமடைந்ததாகவும், பழைய துணியோடு புதிய துணியை இணைத்து கிழிசலையும், பீறலையும் அதிக-மாக்கிற்று என்று சொல்லப்பட்டிருப்பதையும் வாசித்துப் பாருங்கள். மாற்கு.2:21, 22.

எட்வார்ட்டன்

## கிறிஸ்து ஒருவரே மத்தியஸ்தர்—வேறே தரகர் தேவையில்லை

தற்காலத்தில் சிலர் தங்களை வரம்பெற்ற ஊழியர்கள் என்று விளம்பரப்படுத்திக் கொண்டு தரகு வேலையில் ஈடுபட்டு, மக்களின் மரண பயத்தையும், வியாதியின் தொல்லைகளையும், பிசாசின் கட்டுகளையும் தங்கள் வல்லமையான ஜெபங்களினால் நீக்கிப்போடுகிறோம் என்று கூறித் திரிகிறார்கள். பாமர மக்களும், சத்தியம் தெரியாத மக்களும் அவர்களுடைய மாயத்தை நம்பி, அவர்களை நாடி, தங்கள் பிரச்சனைகளுக்காகவும், வியாதிகளுக்காகவும், பிசாசின் கட்டுகள் அகற்றப்படுவதற்காகவும் ஜெபிக்கும்படி கணிசமான காணிக்கைகளையும் செலுத்துகிறார்கள்.

அன்புக்குரியவர்களே! அன்னாளின் மலட்டுத் தன்மை நீக்கப்பட்டது தீர்க்கதரிசியாகிய ஏலியின் ஜெபத்தினால் அல்ல; தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்த அன்னாளின் ஜெபத்தி-னாலேயே (1சாமு 1:9-18 ) இதயம் நொறுங்கி மனத்தாழ்மை-யுடன் கண்ணீர் விட்டு ஜெபிக்கிற எவருடைய மன்றாட்டுக்கும் தேவன் இரங்குகிறார் (லூக்18:13, 14.) தமது சித்தத்தின்படி குணமளிக்கிறார். கர்த்தர் என்றால் ஆளுநர் என்று பொருள். இந்த சுயநலமிகளுக்கும், விளம்பர விரும்பிகளுக்கும் குற்றேவல் புரியும் வேலைக்காரன் அல்ல. எந்த ஒரு மனிதனும் அவன் எவ்வளவு பெரியவனாக இருந்தாலும்—தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தன் அல்ல; கிறிஸ்து ஒருவரே மத்தியஸ்தர். 1தீமோ 2:5 இழிவான ஆதாயத்துக்காக மக்களை வஞ்சிக்கும் போதகர்களின் மாயத்தினால் ஏமாந்து போகவேண்டாம்.

உன் பாவ வாழ்க்கையை வெறுத்து, மனம் திரும்பி உள்ள முருகி தேவனிடத்தில் மன்றாடு. அவர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் யோனா 4:2. அவரிடம் நேரடித் தொடர்பு கொள்; மனம் திரும்பி குணப்படு. அவர் உன்னை ஏற்றுக்கொண்டு ஆதரிப்பார் சங் 55:22.

# கர்த்தருடைய பந்தி என்கிற இராபோஜனம்

கர்த்தருடைய பந்தி கிறிஸ்தவர்கள் அனுஷ்டிக்கும் நினைவு விருந்தாகும். இதை இராபோஜனம் என்றும் கர்த்தருடைய விருந்து என்றும் கூறுவர். அதன் ஆழ்ந்த கருத்தினாலும், எளிமையினாலும் அது சபைக்கு தனி சிறப்பாய் அமைந்துள்ளது. இயேசுவே இந்த பந்தியை ஏற்படுத்தினார். மத் 26:26-30; மாற்கு 14:22-26; லூக் 22:14-20. இப்பந்தி பஸ்கா பண்டிகைக்கு முந்தின நாளில் ஏற்படுத்தப் பட்டது. பஸ்கா பண்டிகை என்பது இஸ்ரவேல் மக்களை தேவன் எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுவித்த நாளைக் குறிக்கும் பண்டிகையாகும். உபா 16 ''இது முதல் இந்த திராட்சைப் பழ ரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் இராஜ்ஜியத் திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லை என்று உங்களுக்கு சொல்லுகிறேன்'' என்றார். மத். 26:29 இங்கே நவமானது, புதிதானது என்ன?

1. பந்தி புதிய இராஜ்ஜியத்திலே இருக்கும் கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் பழைய யூதருடைய முறைமைகளை ஒழித்து விட்டு (எபே 2:15) புதிய இராஜ்ஜியத்திற்கு ஏற்ற புதிய உடன்படிக்கையை கட்டளையிட்டார் (மத் 26:28; எபி 9:15-17 10:9, 19, 26 )

2. பந்தியில் புதிய விடுதலையை நினைவு கூறுகிறோம். கிறிஸ்துவின் மரணம் பாவத்திலிருந்து நமக்கு விடுதலை பெற்றுத் தந்தது. அவரு-டைய மரணத்தை நினைவு கூறுவதால் (1 கொரி 11-27.) சிலர் நினைக்கிற மாதிரி அவருடைய மரணம் ஒரு தோல்வியல்ல; அது ஒரு மாபெரும் வெற்றி என்று உணர்த்துகிறோம்.

3. யூதர்களுடைய தொழுகை நாள் ஓய்வு நாள். ஆனால் கர்த்த ருடைய பந்தி புதிய நாளிலே அனுஷ்டிக்கப்படும். கர்த்தருடைய நாள் வாரத்தின் முதல் நாள். (அப். 20:7.) பஸ்காவில் சீஷர்கள் புசித்த புளிப்பில்லாத அப்பமும், இரசமும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் பரிசுத்த ஆவியின் வெளிப்படுத்தலினால் புதிய பொருளும் சிறப்பும் பெற்றது.

கர்த்தருடைய பந்தியின் சிறப்பு(1 கொரி 10:15-21; 11:17-34

**A.** இது ஓர் ஐக்கியம் (1 கொரி 10:15:21.) Koinonia என்ற கிரேக்கச் சொல்லுக்கு 'பொதுவாக அனுபவித்தல், பங்கு கொள்ளுதல், பகிர்ந்து கொள்ளுதல்' என்று பொருள், நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிற-தல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கிய மாயிருக்கிறதல்லவா? (1 கொரி 10:16.)

பந்தியில் பங்கு கொள்ளுதல் என்பது சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தின் நன்மைகளை பகிர்ந்து கொள்வது என்பதாகும். இந்த இரத்தம் நம்முடைய பாவ மன்னிப்புக்கென்று கல்வாரியில் சிந்தப்பட்டது.

B. பந்தியின் மூன்று முக்கிய அம்சங்கள்:

1. ஓர் ஞாபகார்த்தம், நினைவு கூறுதல் (1 கொரி 11:25-33) என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் (வ 25.)

2. ஓர் பிரகடனம் (1 கொரி 11:26.) இது 'Katangelleus' என்ற கிரேக்கச் சொல்லின் மொழியாக்கம், அழிந்து போய்க்கொண்டிருக்கிற மனிதர்களுக்காக கிறிஸ்து மரித்தார் என்னும் மௌன அறிவிப்பாகும்.

3. ஓர் தற்பரிசோதனை (1 கொரி 11:28,29.) நீ இராப் போஜனத்தில் பங்கு கொள்ளத் தகுதியற்றவன் என்று மற்றவர்கள் தீர்மானித்து தடை செய்வதல்ல. ஒருவன் என்ன பாவம் செய்தான், அது அவனுக்கு மன்னிக்கப்பட்டதா என்ற காரியங்கள் தேவனுக்கும் சம்பந்தப்பட்டவனுக்கும் தான் உறுதியாகத் தெரியும். ஆகவே ஒவ்வொருவனும் தன்னைத்தானே சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

விக்கிரக ஆராதனையிலும், அதன் வழிகளிலும் பங்குகொள்ளாதபடிக்கு சபை கவனமாய் இருக்கவேண்டும். மேலும், அன்றாடம் நாம் உட்கொள்ளுகிற உணவைப் போன்று உண்ணக்கூடாது (1 கொரி 10:20-21.) ஒவ்வொருவனும் தன்னைத்தானே சோதித்தறிந்து. ஜாக்கிரதையாய் இதில் கைவிடவேண்டும். ஏனென்றால், 'அபாத்திரமாய் போஜன பானம் பண்ணுகிறவன் தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி பண்ணுகிறான் (வ. 29)'. ஆகவே, கர்த்தருடைய பந்தி என்பது (1) ஓர் நினைவு கூர்தல் (2) ஓர் பிரகடனம் (3) ஒரு தற்பரிசோதனை.

## பங்கு கொள்ள வேண்டிய நாளும், முறைகளும்:

இராபோஜனம் அல்லது கர்த்தருடைய பந்தியை எவ்வாறு அனுஷ்டிப்பது என்கிற கட்டளையை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டதாகக் கூறுகிறார். (1 கொரி 11:23). ஆகவே எல்லா சபைகளும் அதைக் கைக்கொள்ள வேண்டும். (1 கொரி 4:17;14:37; 2 தீமோ 1:13). கர்த்தருடைய பந்தியை அடிக்கடி கைக்கொள்ள வேண்டும் என்பது அப்போஸ்தலருடைய உபதேசம். ஆனால், அடிக்கடி என்றால் எத்தனை நாட்களுக்கு ஒருமுறை என்பதை நாம் ஆதிச் சபைகளில் காணப்பட்ட நடைமுறைகளைப் பார்த்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

A. தவறாமல் பங்கு கொள்ளவேண்டும். (1 கொரி 11:17, 18, 20, 33, 34) ஆகிய வசனங்களைப் பார்க்கும் போது ஆதிக் கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்டுதலை உறுதியாக அனுஷ்டித்தார்கள் என்று

எண்ணத் தோன்றுகிறது. கர்த்தருடைய பந்தியை அனுஷ்டிக்க வேண்டிய நாளையும், முறைகளையும் தேவன் கட்டளையாகச் சொல்லாத படியால் மனிதன் யுக்தானுசாரப்படி தங்கள் வசதிக்கேற்ப நடத்திக் கொள்ளலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆயினும் ஆதிக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மரணத்தை மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் அனுஷ்டித்தார்கள் என்பது தெளிவு.

### B. வாரத்தின் முதல் நாளில் (அப் 20:7)

தமிழில் "சீஷர்கள் கூடி வந்திருக்கையில் என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருப்பது மூல மொழியாகிய கிரேக்க மொழியில் கூடி வரச் செய்யப்பட்டார்கள்" என்றிருக்கிறது. அதாவது சீஷர்கள் தாங்களாகவே சுய விருப்பத்தின்படி கூடி வரவில்லை. கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்றும்படிக்கே கூடி வந்தார்கள். பவுல் ஸ்தாபித்த சபைகள் எல்லாவற்றிலுமே துரோவா பட்டணத்தில் செய்யப்பட்டது போலவே செய்யப்பட்டிருக்கும் என்று நம்பலாம். ஏனெனில், 1 கொரி 4;17-ல் 'நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்துவந்த பிரகாரம்' என்று பவுல் கூறுகிறார். பவுல் அந்தக் கட்டளையை கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன் என்று கூறுகிறார். 1 கொரி 11:23. இதை மற்ற நாட்களில் அனுஷ்டித்தார்கள் என்பதற்கு ஆதாரமில்லை.

### C. இது பொதுவான போஜனமல்ல:

கொரிந்துவில் உள்ள சபைக்கு, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள் என்று பவுல் புத்தி சொல்லுகிறார். (1 கொரி 11:33.) மேலும், ஒருவனுக்குப் பசியாயிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன் (வ. 34) என்கிறார். லூக்கா பொதுவான போஜனத்தையும், இரா போஜனத்தையும் பிரித்துக் காட்டுகிறார். (அப் 2:42; 2:46; 20:7; 20:11.) ஆதிசபை "அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப் 2:42.) இது வசனத் தொடர்ச்சியின் பிரகாரம் அப்போஸ்தல உபதேசத்துடன் இணைக்கப்பட்டிருப்பதால் இது தொழுகைக்குரிய இராப் போஜனம் என்று அறிந்து கொள்ளலாம். அப் 2:46-ல் அவர்கள் வீடுகள் தோறும் அப்பம் பிட்டார்கள் என்பது பொதுவான போஜனத்தைக் குறிக்கிறது; இராப்போஜனத்தையல்ல. அதே போன்று துரோவாவில் (அப் 20:7) பவுல் ஏழு நாட்கள்காத்திருந்து (அப் 20:6,) சபை அப்பம் பிட்கும்படி கூடி வந்திருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. பின்பு அப்பம் பிட்டு புசித்து விடியற்காலமட்டும் வெகு நேரம் உரையாடிக் கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டதாகவும் (அப் 20:11.) எழுதப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். மேலும், 1 கொரி 10:16-ல் நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியம் என்றும் நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியம் என்றும் இராப்போஜனத்தின் புனிதத்தைப் பற்றி விளக்கம் கொடுக்கிறார்.

# ஆதியாகமம் ஒரு கண்ணோட்டம்

'ஆதியாகமம்' என்றால் ஆரம்ப நூல் என்று பொருள்படும். மூல மொழியாகிய எபிரேயு மொழியிலும் '' ஆதியிலே '' என்று பொருள் தரக்கூடிய "பெரிஷீத் '' என்ற சொல்லும், கிரேக்க மொழியில் ''ஆரம்பம்'' என்று பொருள் தரும் ''ஜெனிஸஸ்'' என்ற சொல்லும், பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

*ஆதியாகமத்தின் காலம் :* ஆதியாகமத்தில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் பூகோள ரீதியாக மூன்று பிரிவுகளாய்ப் பிரிந்து நிற்கின்றன,

1) செழிப்பான வளைவு (Fertile Cresent) ஆதி 1-11 அதி
2) இஸ்ரவேல் நாடு (கானான்) 12-36 அதி
3) எகிப்து 37-50 அதி

முதல் கட்டமாகிய ஆதியாகமம் 1 முதல் 11 அதிகார சம்பவங்கள் வேகமாக நகர்ந்து சுமார் 2000 ஆண்டுக்கால கட்டத்தையும் சுமார் 1500 மைல் பயணங்களையும் உள்ளடக்கியிருக்கின்றன. வியப்புமிகு படைப்பு, அழகிய ஏதோன் தோட்ட அமைப்பு பயங்கரமான நோவா காலத்து வெள்ளப் பெருக்கு, பாபேல் கோபுர மொழிக் குழப்பம் ஆகியவைகள் இக்கால கட்டத்தின் சிறப்பு நிகழ்ச்சிகள்.

மத்தியப் பகுதியாகிய 12 முதல் 36 அதிகாரங்கள் வரையிலான கால கட்டத்தில் சிறு நிலப்பரப்பாகிய கானான் தேசத்தில் அழைக்கப் பட்ட ஆபிரகாமின் வம்சா வழியினர் வாழ்ந்த சுமார் 200 ஆண்டுக் கால வரலாறு கூறப்பட்டிருக்கிறது. பல்வேறு விதமான அருவருக்கத் தக்க விக்கிரக வணக்கத்தாராகிய கானான் நாட்டுப் பூர்வீகக் குடிகளின் கலாச்சாரத்தால் பாதிக்கப்படாதபடிக்கு, தேவ பக்தியும், விசுவாசமும் நிறைந்த ஆபிரகாமும், முற்பிதாக்களும் தாக்குப் பிடித்து நின்றிருந் தாலும், அவர்களுக்குப் பின் அவருடைய சந்ததியார்கள் வர வரப் பலவீனர்களாகி வீழ்ந்துபோய்ப் பல விதமான அசுத்தங்களை ஆவலோடு நடப்பிக்கிற மக்களாக மாறி, தேவனுக்கு துரோகம் செய்தனர்.

---

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

**D. கர்த்தருடைய பந்தியில் இருக்க வேண்டிய பொருட்கள்:**

புளிப்பில்லாத அப்பமும், திராட்சை ரசமும் மட்டுமே கர்த்தருடைய பந்திக்கென்று வேதாகமத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பொருட்களாகும். ஏனெனில், பஸ்கா பண்டிகையில் உபயோகிக்கப்பட்ட அப்பம் புளிப்பில்லாதது உபா 16-18. அதே போன்று மத் 26:29-ல் திராட்-சைப்பழ இரசம், என்று திட்டமாக சொல்லப்பட்டிருக்கிறது. எலுமிச்சைப்பழ இரசமோ அல்லது ஆப்பிள் பழ இரசமோ என்று சொல்லப்படவில்லை

கடைசிப் பகுதியாக 14 அதிகாரங்கள் தேவன், எவ்வாறு ஆச்சரியமான முறையில், எண்ணிக்கையில் மிகமிகக் குறைவாக இருந்த யாக்கோபு என்னும் இஸ்ரவேலின் மக்களாகிய எழுபது ஆத்துமாக்களை அவ் வசுத்தத்தால் கறைப்படாமல் காப்பாற்றுவான் வேண்டி, எகிப்தைப் பாதுகாப்புப் பெட்டகமாக மாற்றினார் என்றும் அங்கே இஸ்ரவேலர் வளர்ந்து பெருகிச் சற்றேறக் குறைய நானூற்று முப்பது ஆண்டு காலத்துக்குள் எகிப்தியரே பார்த்துப் பயப்படும் அளவுக்கு பெரும் மக்கள் கூட்டமாக மாறினர் என்றும் விளக்குகிறது.

ஆதியாகமம் உள்ளடக்கியுள்ள கால கட்டத்தை மற்ற 65 நூல்களும் சேர்ந்து மொத்தமாக உள்ளடக்கிய காலகட்டத்தை வி—அதிகம் என்பதைப் பின் வரும் புள்ளி விபரங்கள் விளக்கும்.

*அ. அதி 1—11, 2000 ஆண்டுகளுக்கும் கொஞ்சம் அதிகம்.*
*கி, மு. 4000 — கி. மு. 2090*

உலகப் படைப்பு முதல் (அதி 1;1) — தோராகு மரணம் வரை (ஆதி 11.32)

*ஆ, அதி 12-36—சுமார் 193 ஆண்டுகள்*
*கி. மு. 2090 — கி. மு. 1897 வரை.*
தேராகு மரணம் முதல் (ஆதி 11 :32) யோசேப்பு எகிப்து செல்லும் வரை (அதி 37.26)

*இ. அதி 37-50 — சுமார் 93 ஆண்டுகள்*
*கி. மு. 1897 — கி, மு, 1804 வரை.*

யோசேப்பு எகிப்து சென்றதிலிருந்து யோசேப்பு மரணம் வரை ஆக தோராயமாக 2090+193+93 2376 ஆண்டுகள்

*ஆதியாகமமும் கிறிஸ்துவும் :-* ஆதியாகமம் கிறிஸ்துவைப்பற்றி பொதுவாகவும் குறிப்பாகவும் தீர்க்கதரிசனங்களை உரைக்கிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1: | கிறிஸ்து | ஸ்திரீயின் வித்து | ஆதி | 3:15 |
| 2. | ,, | சேத்தின் வம்சாவழி | ,, | 4;25 |
| 3. | ,, | சேமின் குமாரன் | ,, | 9;27 |
| 4. | ,, | ஆபிரகாமின் சந்ததி | ,, | 12:3 |
| 5, | ,, | ஈசாக்கின் சந்ததி | ,, | 21:12 |
| 6. | ,, | யாக்கோபின் சந்ததி | ,, | 25;23 |
| 7, | ,, | யூதாவின் கோத்திரம் | ,, | 49;10 |

ஆதியாகமத்தில் கூறப்படும் சில முற்பிதாக்களும். நிகழ்ச்சிகளும் கிறிஸ்துவோடு ஒப்பு நோக்கப்பட்டு மாதிரிகளாகக் கூறப்பட்டுள்ளன.

**ஆதாம் :-** ஆதாம் பின்பு வந்தவருக்கு (கிறிஸ்துவுக்கு) முன் அடையாளமானவன் ரோமர் 5;14 இருவருமே தேவனுடைய சிறப்பான திட்டத்தின் கீழ் பாவமில்லாதவர்களாக பூவுலகுக்கு வந்தவர்கள். ஆதாம் முந்திய தலைமுறைக்கு முதல்வர்: கிறிஸ்து புதிய தலைமுறைக்கு முன்னோடி.

**ஆபேலின் பலி :-** தேவன் ஏற்றுக் கொண்ட ஆபேலுடைய இரத்த பலியும், காயீனால் ஆபேல் கொல்லப்பட்ட நிகழ்ச்சியும். கிறிஸ்து மனுக்குல மீட்புக்காக சிந்தின இரத்தம், மரணம் ஆகியவைகளைச் சுட்டிக்காட்டுகிறது.

**மெல்கிசேதேக்கு :-** நீதியின் ராஜா, சமாதானத்தின் ராஜா என்று பொருள்படும் சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாக இருந்த மெல்கிசேதேக்கு, தேவனுடைய குமாரனுக்குச் சமானமானவர் என்று ஒப்புவமையாக சொல்லப்பட்டிருக்கிறது, எபி 7;1-3

**யோசேப்பு :-** அதேபோன்று யோசேப்பும் கிறிஸ்துவோடு ஒப்பு நோக்கப்பட்டிருக்கிறார். இருவருமே தன் தகப்பன்மாரால் சிறப்பாக நேசிக்கப்பட்டவர்கள்; சகோதரர்களால் வெறுக்கப்பட்டவர்கள். இருவருமே தங்களுடைய சொந்த ஜனங்களாலேயே வெள்ளிக் காசுக்காக விற்கப்பட்டவர்கள். இருவருமே நிரபராதிகளாக இருந்தும் குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்டவர்கள். இருவருமே மனிதர்களால் சிறுமைப்படுத்தப்பட்டிருந்தாலும், தேவனால் உயர்த்தப்பட்டவர்கள்.

**ஆதியாகமத்தின் திறவுகோல் வார்த்தை:-** ஆரம்பம் (beginning) ஆதியாகமம் சற்றேறக் குறைய உலகம். வாழ்க்கை, மனித இனம், ஓய்வு நாள், மரணம், மணவாழ்க்கை, பாவம். மீட்பு, குடும்பம் இலக்கியம், நாகரீகம், கலை, மொழி, பலி என்று பல காரியங்களுக்கு ஊற்றுக் கண்ணாக விளங்குகிறது. ஆதியாகமத்தின் திறவுகோல் வசனங்கள் :- ஆதி 3;15' 12-3 '' உனக்கும் ஸ்திரீக்கும்; உன் வித்துக்கும், அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன், அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். உன்னை ஆசீர்வதிப்பவர்களை ஆசீர்வதிப்பேன்; உன்னைச் சபிப்பவர்களைச் சபிப்பேன், பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும் என்றார்,

ஆதியாகமத்தின் திறவுகோல் அதிகாரம் :- 25-ஆம் அதிகாரம் தேவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கைகளுக்கு மையமாக

இவ்வதிகாரம் அமைந்துள்ளது. முதலில் 12:1-3ல் கொடுக்கப்பட்டுப் பின்னர் 15:1-21ல் உறுதி செய்யப்பட்டிருக்கிறது, யாக்கோபு என்கிற இஸ்ரவேல் மூன்று திட்டவட்டமான வாக்குறுதிகள் பெறுகிறார்,

1) நாடு: எகிப்து நதி முதல் ஐபிராத்து நதி என்னும் பெரிய நதி மட்டும் ஆதி 15:18

2) "மக்கட் பெருக்கம்: உன் சந்ததியைத் தூளைப் போலப் பெருகப் பண்ணுவேன்" 13;16

3) ஆசீர்வாதம் "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப் படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" ஆதி 12:2

**ஆதியாகமும் வரலாறும்:-** ஆதியாகமம் மனுக்குலத்தின் வரலாற்று நூல் அன்று; மனுக்குல மீட்பின் திட்ட வரலாற்றின் முதல் அத்தியாயமே, எனவே ஆதியாகமம் ஆன்மீக உயர் நெறிகளின் தொகுப்பு என்பதே மிகப்பொருத்தம். ஆபிரகாமும் முற்பிதாக்களும் வாழ்விலும் தாழ்விலும், துன்பத்திலும். மகிழ்ச்சியிலும், நிறைவிலும், குறைவிலும் கர்த்தரை அண்டிக் கொள்வதே கர்த்தரால் ஆசீர்வதிக்கப் படுவதற்கு ஒரே வழி என்பதை வாழ்ந்து காட்டினர். ஆதியாகமத்தின் முதல் பதினொரு அதிகாரங்கள் நான்கு பெரிய நிகழ்ச்சிகளைப்பற்றியும் (1—11) மீதி அதிகாரங்கள் நான்கு பெரிய மனிதர்களைப் பற்றியும் நமக்கு எடுத்துரைக்கின்றது (12-50)

நான்கு பெரிய நிகழ்ச்சிகள் (1—11) பரிசுத்த வேதாகமம் என்கிற மாபெரும் மாளிகை ஆதி 1 முதல் 11 அதிகாரங்களில் காணப்படுகிற, கீழ் வரும் நான்கு பெரிய நிகழ்ச்சிகளை தூண்களாக நிறுவி அடிப்படை அமைக்கப்பட்டிருக்கிறது எனக்கூறலாம் அவைகளாவன :—

(அ) படைப்பு (Creation) மனிதன், பொருள், ஆற்றல், மண்டலம் காலம் (Man, matter, energy, Space Time) ஆகியவைகளைப் படைத்தவர் தேவனே. அதில் மனிதன் படைப்பின் சிகரம்.

(ஆ) வீழ்ச்சி!- (Fall) சிருஷ்டிப்பதைத் தொடர்ந்து பாவம் தன் இயல்புகளை மனுக்குலத்துக்குள் செலுத்தியது, அதன் விளைவாக முதல் பாவத்தினால் மனிதன் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுகிறான், (ஆதாம்—கடவுள்) இரண்டாவது பாவத்தினால் மனிதன் மனிதனிலிருந்து பிரிக்கப்படுகிறான், (காயீன்ஆபேல்) இவ்வாறு பாவத்தின் கொடுமைக் கரங்கள் மனுக்குலத்தின் குரல்வளையை நெறிக்கும் சூழ் நிலையை உணர்ந்த தேவன் ஸ்திரீயின் வித்து மூலமாக மனுக்குலத்தின் மீட்புக்கான திட்டத்தை அறிவிக்கிறார் (ஆதி 3—15).

(இ) வெள்ளப் பெருக்கு: (Flood) மக்கள் பெருக்கத்தோடு சேர்ந்து, பாவமும் பெருகினபடியால் தேவன் மனுக்குலத்தை அழிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு மகா

ஆழத்தின் ஊற்றுக் கண்களையெல்லாம் பிளந்து வானத்தின் மதகுகளைத் திறந்து நாற்பது நாட்கள் பெருமழை பெய்யப்பண்ணி அனைத்து உயிரினங்களையும் பூமியில் இராதபடி அழித்தார். ஆயினும் தன் பார்வைக்கு நீதிமானாகக் காணப்பட்ட நோவாவையும் அவனுடைய குடும்பத்தாரையும் காப்பாற்றினார்.

ஈ. **இனப் பிரிவுகள்:- (Race)** ஆதியாகம ஆரம்பக் கட்டத்தில் மனுக்குலம் ஒன்றாக இருப்பதைக் காணலாம். நோவாவின் மூலமாக மனுக்குலம் ஆதாம் என்னும் ஒரே மனிதனின் சந்ததியாக இருந்தனர், பாபேல் கோபுரத்தை எழுப்பி தேவசித்தத்தை அவமாக்கும் முயற்சியில் மக்கள் ஈடுபட்டதால் மொழிக் குழப்பத்தை உண்டாக்கி மக்கள் பல்வேறு இனங்களாக உலகின் பல பாகங்களுக்குச் சிதறிப்போகப் பண்ணினார்,

**நான்கு பெரிய மனிதர்கள் : (12—50)** இவ்விதமாய் மனுக்குலம் சிதறடிக்கப்பட்ட பிறகு தேவன் தம் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்ற ஒரு மனிதனையும் அவன் சந்ததியையும் தேர்வு செய்ய வேண்டியதாயிற்று.

**(1) ஆபிரகாம்:** ஆபிரகாம் என்னும் ஊர் பட்டணத்து மனிதன் அழைக்கப்பட்ட நிகழ்ச்சி இந்நூலின் மையம். (ஆதி 12) ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட மூன்று உடன்படிக்கை வாக்குத் தத்தங்கள் ஆகிய நாடு, மக்கட் பெருக்கம், ஆசீர்வாதம் என்னும் அடித் தளத்தின் மேல் அவருடைய " மனுக்குல இரட்சிப்பின் திட்டம் செயல்படத் துவங்குகிறது.

**(2) ஈசாக்கு:-** ஆபிரகாமின் ஆன்மீகத் தொடர் சங்கிலியாகிய ஈசாக்கு என்னும் வாக்குத்தத்தத்தின் குமாரனோடு தன் உடன்படிக்கையை உறுதி செய்கிறார்.

**(3) யாக்கோபு, தேவன்:-** சுயநலம் பேராசை என்னும் தீய பண்புகளின் மொத்த உருவமாக இருந்த யாக்கோபின் இழிகுணங்களை மாத்திரமல்ல. பெயரையும் மாற்றி இஸ்ரவேல் என்று அழைத்து தன் உடன்படிக்கையை இஸ்ரவேலோடு உறுதி செய்கிறார்.

**(4) யோசேப்பு:** தன் தகப்பனாகிய யாக்கோபின் விசேஷித்த அன்புக்கு உரியவனாக இருந்தும், சகோதரர்களால் வெறுக்கப்பட்டு எகிப்து நாட்டுக்குள் அடிமையாகப் பிரவேசித்தான். தேவனின் பெரிதான கிருபையால் எகிப்தின் முடிசூடா மன்னனாக உயர்த்தப்பட்டு தன்னைக் கொடுமைப்படுத்திய தகப்பன் குடும்பத்தார் அனைவருக்கும் தஞ்சம் கொடுத்து எகிப்தின் செழுமையான நிலப்பரப்பில் வாழ்ந்து பெருக வகை செய்தான். யோசேப்பின் மரணத்துக்குப் பிறகு ஏற்பட்ட பல மாற்றங்கள். அடிமைத்தன நுகத்தை உடைத்தெறிய அடித்தளம் அமைத்தது.

# அசைக்க முடியாத ஒரு இராஜ்ஜியம்

நாம் பெறப் போகிற அசைவில்லாத அந்த இராஜ்ஜியத்தைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் எபிரெயர் 12:28 இல் சொல்லியிருக்கிறார். தானியேல் இந்த இராஜ்ஜியம் எப்போதும் நிலைத்திருக்கும் என்று தானியேல் 2:44 இல் முன்னறிவித்திருக்கிறார். உலகத்திலே நான்கு பெரிய இராஜ்ஜியங்கள் இருக்கும் என்று இந்த இரண்டாம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். கடந்த காலத்தில் நான்கு பெரிய இராஜ்ஜியங்கள் இருந்ததை சரித்திரம் வெளிப்படுத்துகிறது. யோவான் ஸ்நானகன் இராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கித்துக் கொண்டிருந்தார். (மத்தேயு 3:2) யோவான் ஸ்நானகன் சிரச்சேதம் செய்யப்பட்டபின்பு இயேசு அந்த ஊழியத்தைத் தொடர்ந்து, 'பரலோக இராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது 'என்று பிரசங்கித்தார். (மத்தேயு 4:17) மாற்கு 9:1 இல் அவர், அந்த இராஜ்ஜியம் பலத்தோடு வருவதை சிலர் காணுமுன் மரணமடைவதில்லை என்று சொன்னதினால் அந்த இராஜ்ஜியம் எவ்வளவு சமீபித்திருந்தது என்பது புரியும். பரிசுத்த ஆவியானவர் எருசலேமில் அப்போஸ்தலர்கள் மீது அவர்கள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைப் பிரசங்கிக்க நகரத்தை விட்டுப் புறப்படுமுன் வருமென்று சொல்லியிருக்கிறார். லூக்கா 24:49 இல் என் பிதா வாக்குத் தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். இயேசு இந்த பூமியை விட்டுப் போகும் முன்பு வல்லமை எப்போது வரும் என்று நமக்குச் சொல்லியிருக்கிறார். அப்போஸ்தலர் 1:8இல் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். ஆகையால் ஆண்டவர் எப்போதும் இருக்கக் கூடிய ஒரு இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார் என்பதைப் புரிந்து கொள்ளலாம். யோவான் ஸ்நானகன் இராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது என்றார். இயேசுவோடிருந்த மனிதர்களின் வாழ்நாளிலேயே இராஜ்ஜியம் வருமென்று இயேசு சொன்னார். வல்லமையோடு அந்த இராஜ்ஜியம் வருமென்றார். எருசலேமிலே இராஜ்ஜியம் வருமென்றும், பரிசுத்த ஆவியானவர் வரும் போது அப்போஸ்தலர்கள் பெலனடைவார்கள் என்றும் முன்னமே படித்தோம்.

இயேசு இந்த பூமியை விட்டுப் போகும் முன்பு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது (மத்தேயு 28:18) என்றார்.

பரிசுத்த ஆவியானவர், இயேசுவானவருக்கு மரித்தோரிலிருந்து எழுந்த போது வல்லமை இருந்ததென்று சொன்னார். பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்

தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார் (ரோமர் 1:14) மேலும் பெந்தேகோஸ்தே நாளில் பேதுரு தன்னுடைய முதல் பிரசங்கத்தை இந்த விதமாக முடிக்கிறார். ஆகையினால் நீங்கள் சிலுவையிலறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவர்கள் என்றான். (அப் 2:36). வேதாகமத்தின் மூலம் நாம் எதையும் நிரூபிக்க முடியும் என்றால் இயேசுவானவரின் உயிர்த்தெழுதலுக்குப் பின் வந்த முதல் பெந்தேகோஸ்தே நாளிலே இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப் பட்டதென்று நிரூபிப்பதில் சிரமம் ஒன்றும் இருக்க முடியாது.

அநேகர் ஆண்டவர் சொன்ன ஜெபத்தை நாம் ஏன் ஜெபிப்பதில்லை என்று அடிக்கடி கேட்கிறார்கள். நாம் ஆண்டவருடைய ஜெபம் என்று சொல்லுகிறதை இயேசு ஒருபோதும் ஜெபித்ததில்லை. அப்போஸ்தலர்கள் ஜெபிக்கும்படி மாதிரியாகவே அதைக் கொடுத்தார். மத்தேயு 6;9இல் நீங்கள் ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது என்று சொல்கிறார். மத் 6:33ல் முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் என்றார். அவர்கள் விண்ணிலே தேடினார்களா? இல்லை. பெந்தேகோஸ்தே நாளிலே இராஜ்ஜியம் துவங்கியது என சொன்னோம். ஏற்கனவே இராஜ்ஜியம் வந்து விட்டபடியால் இப்போது உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக என்று ஜெபிப்பது கேலிஆக இருக்கும்! பெந்தே கோஸ்தே நாளுக்குப் பிறகு அதுஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட ஒன்றாகவே பேசப்படுகிறதை கவனிக்கவும்.

பரிசுத்த பவுல் அப் 14:22-ல் நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பரவேசிக்கவேண்டுமென்று சொன்னார். அடுத்த வசனத்தில் (அப் 14;23) அந்தச் சபைகளில் மூப்பர்களை நியமித்தார்கள் என்று பார்க்கிறோம். சில மனிதர்களுடைய போதனை தவறானது என்பதே போல் சபையும் இராஜ்ஜியமும் ஒன்றே என்பதைப் பார்க்கிறோம். அப்படி இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஒரே சரீர முண்டு (எபே 4:4) அந்த சரீரம் சபை (எபே 1:22,23) இயேசுகிறிஸ்துவே சபையையும் இராஜ்ஜியத்தையும் ஒன்றாக்கினர். நான் சொல்லுகிறேன்; நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் கதவுகள் இதை மேற்கொள்வதில்லை பரலோகத்தின் திறவுகோலை உன்னிடத்தில் தருகிறேன். நீ பூமியில் எதைக் கட்டுகிறாயோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். நீ பூமியில் எதைக் கட்ட விழ்க்கிறாயோ அது பரலோக இராஜ்ஜியத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.

கொலோசேயர் 1:13ல் இருளின் அந்த காரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்திற்கு

உட்படுத்தினவருடைய . என்றும் 18:ம் வசனத்தில் அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர். எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேருமானவர் என்கிறார்! இயேசு எல்லாவற்றிலும் முதற்பேறுனவராயிருந்தால் இப்போது கட்டாயமாக அவரே ஆளுகை செய்து கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர் முதற் பேறுனவர் இல்லை அப்படித்தானே?

அநேகர் இயேசுவுக்கு தன் இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும் நோக்கமிருந்தது என்றும். ஆனால் யூதர்கள் அவரை மறுதலித்தபோது சபையை அவர் ஸ்தாபித்தார் என்றும் போதிக்கிறார்கள். இந்தக் கருத்துக்கு எந்தவித ஆதாரமும் கிடையாது. வேதத்தில் இராஜ்ஜியம் என்பது ஸ்தாபிக்கப்பட்ட உண்மையென்று அடிக்கடி போதிப்பதைப் பார்த்தோம். சிலர் பூமியில் இயேசு இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார் என்று சொல்கிறார்கள். யோவான் 18:36 படி 'எனது இராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரியதல்ல' என்று சொல்லியிருக்கும் போது, இயேசு எப்படி பூமிக்குரிய இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார்? என் இராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரியதல்ல. என் இராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரிய தானால் நான் யூதரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் இராஜ்ஜியம் இவ்விடத்திற்குரியதல்ல. ஆகவே இயேசுகிறிஸ்து எதிர்காலத்தில் தன் இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார் என்கிற போதனை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தைக்கு முரண்படுகிறதாயிருக்கிறது; இன்னும் பார்ப்போமானால். இயேசு முதலாவது ஊழியத்தை துவங்கியபோது இராஜ்ஜியம் சமீபமாயிருக்கிறது என்று போதித்தார் யோவான் ஸ்நானகனும் தேவனுடைய இராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது என்று போதித்தது அவர்களுக்குத் தெரியுமாதலால் இயேசு கிறிஸ்துவை அணுகி, இராஜ்ஜியம் எப்போது வரப்போகிறது என்று கேட்டார்கள். லூக்கா 17:20, இயேசு தேவனுடைய இராஜ்ஜியம் பிரத்தியட்சமாய் வராது என்றார். பூமியிலே இயேசு தன்னுடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார் என்று இன்னும் போதிக்கிறார்கள். பிரத்தியட்சமாக அதைப் பெறப்போகிறார்கள்? தேவனுடைய இராஜ்ஜியம் உங்களுக்குள்ளேயே இருக்கிறது. லூக்கா 17:21

சபையின் யுகத்தில் இப்போது வாழ்கிறோம் என்றும் இயேசு கிறிஸ்து வரும்போது நாம் இராஜ்ஜிய யுகத்தில் இருப்போம் என்றும் சொல்லுகிறார்கள், வேதம் சபை யுகத்தைப் பற்றியோ, இராஜ்ஜிய யுகத்தைப் பற்றியோ பேசவில்லை.

ஆனால் சபை பிதாவாகிய தேவனுடைய நித்திய நோக்கத்தில் இருந்தது. என்பதை வேதம் போதிக்கிறது, (எபே ; 3 : 10-11), ஆகவே சபை என்பது சிலர் தவறாக போதிக்கிறபடி பிறகு யோசித்து

தவருகப் போதிக்கிறபடி பிறகு யோசித்த ஒன்று (after thought) அல்ல. சபைக்குப் பிறகு வேறொரு காலம் இருக்க முடியாது. நாம் வாசிக்கிறோம். ''சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களும் மகிமை உண்டாவதாக ஆமென்.'' பவுல் அப்போஸ்தலர் 27:25-ல் சொன்ன வார்த்தையை இங்கே சேர்க்க விரும்புகிறேன். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கின்றேன்.

மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனைப் பற்றி அதிகம் பேசுவதைக் கேட்கிறோம், நீங்கள் கிறிஸ்தவர் என்றாலே மறுபடியும் பிறந்தவர் தான். மறுபடியும் பிறத்தல் என்பதன் உண்மை என்ன? என்பதைப் பார்ப்போம். மறுபடியும் பிறந்தவர்கள் எங்கே இருக்கிறார்கள்? இயேசு சொன்னார் 'நீ மறுபடியும் பிறவா விட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டாய்' என்றார். இதனுடைய பொருள் என்ன? புதிதாய்ப் பிறந்தவர்கள் தேவனுடைய இராஜ்யத்தைக் காண்கிறார்கள். இராஜ்யம் என்பதே இல்லாவிட்டால் எப்படி ஒருவர் புதிதாய் அதில் பிறக்க முடியும்? இயேசு இன்னும் சொல்கிறார். புதிய மறு பிறப்பைப் பற்றி நிக்கோதேமு கேட்டபோது. 'ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இ ரா ஜ் ய த் தி ல் பிரவேசிக்கமாட்டான்.' (யோவான்: 3:5) ஆகவே இராஜ்ஜியம் என்ற ஒன்று இல்லாவிட்டால் அதில் புதிய பிறப்பென்பதும் இருக்க முடியாது அல்லவா? தவறான போதனைகள் மக்கள் மத்தியில் த வ றா ன ஆபத்தான எண்ணங்கள் உருவாவதற்கு வழி செய்கின்றன.

தேவனுடைய வார்த்தையைப் படித்ததின் மூலம் ஓரே சரீரம் உண்டென்று தெரிந்து கொண்டோம். அந்த சரீரம் என்பது சபையோ அல்லது இராஜ்ஜியத்தையோ குறிக்கும். அநேக நிரூபணங்கள் தேவை இல்லை. ஆனால் இப்போது எபிரெயருக்கு எழுதின நிருபத்திலிருந்து சிலவற்றைப் பார்ப்போம்.

குமாரனை நோக்கி, 'தேவனே உ ம் மு டை ய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது. உம்முடைய இராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.' (எபி 1:8) பரிசுத்த ஆவியானவர் உம்முடைய சிங்காசனம் என்று சொல்கிறார், அது இருந்ததென்றோ இருக்கும் என்றோ சொல்லவில்லை. அவர் அந்த இராஜ்யம் எப்போதும் இருக்கிறது என்கிறார். இப்போது, எபிரெயர் 12:13 பார்ப்போம். 'பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் ச ர் வ சங்கமாகிய சபைக்கும்.' சபை பரலோகத்தில் பேரெழுதியிருக்கிறது. இதே அதிகாரத்தில் 28-ம் வசனத்தில் முதற் பேறானவர்களின் சபையை அசைவில்லாத இராஜ்ஜியம் என்றழைக்கிறார். இயேசு மறுபடியும்

இந்தப் பூமியில் கால் வைப்பார் என்று ஒரு வசனம் கூட சொல்ல வில்லை, ஆண்டவருடைய வருகையைக் குறித்து இந்த விதமாக நான் படிக்கிறேன்.

ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதன் உடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முத-லாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோட கூட ஆகாயத் தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தர் உடனேயே கூட இருப்போம். (I தெசலோனிக்கேயர் 4:16;17)

இந்த வார்த்தைகளை நன்கு சிந்தித்துப் பாருங்கள். இயேசுவோடு கூட நித்தியமாய் இருக்கும் பொருட்டு ஆண்டவரை சந்திக்க வானத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம். பூமியிலே இயேசுகிறிஸ்து ஆளுகை செய்ய வாய்ப்பே இல்லை. இராஜ்ஜியம் எதிர்காலத்தில் வரப்போகிற தென்று போதிப்பவர்கள் நீதிமானும், துன்மார்க்கனும் ஒரே நேரத்தில் எழுந்திருப்பார்கள் என்று நம் ஆண்டவர் சொன்னதற்கு எதிராக போதிக்கிறார்கள் அல்லவா? (யோவான் 5:28, 29 பார்க்க) ஒரு மணிக்-குள்ளாக ஒரு ஆயிரம் வருடம் இருக்க முடியாது. இன்னும் யோவான் 6-ம் அதிகாரத்தில், நீதிமான் கடைசி நாளில் எழுப்பப்படுவான் என்று நான்கு முறை சொல்லுகிறார்.. யோவான் 6:39, 40, 44, 54 கடைசி நாளுக்குப் பின் வேறு நேரம் இருக்க முடியாது. கடைசி நாளுக்குப் பிறகு நித்தியம் இருக்கும். அங்கே கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சி கடைசி நாளுக்குப் பிறகு இருக்காது. இயேசு கிறிஸ்து பரமேறினதை இவ்விதமாய் சொல்லப்பட்டிருக்கிறது.

இவைகளை அவர் சொன்ன பின்பு, அவர்கள் பார்த்துக்கொண்-டிருக்கையில் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அப். 1:9. அந்த மேகத்துக்கு மறுபுறம் என்ன நிகழ்ந்ததென்று தானியேல் தீர்க்கதரிசி சொல்கிறார்.

'இராத் தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில் இதோ மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்க-ளுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடம் மட்டும் வந்து அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதி-யாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்கு கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது. அவரு-டைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவம் அவருடைய இராஜ்ஜியம் அழியாததுமாயிருக்கும் தானி' (7:13, 14.)

# கிறிஸ்து வழங்கும்...

## புதிய வாழ்க்கை

ஒருவன் கிறிஸ்துவோடு இணைக்கப்படும் போது. அவன் ஒரு புதிய படைப்பு ஆகிவிட்டான்; பழைய வாழ்க்கை முடிந்துவிட்டது; புதிய வாழ்க்கை தொடங்கிவிட்டது. 2 கொரிந்தியர் 5 ; 17.

இயேசு, "நானே, என் ஆடுகள் என்றுமுள்ள மெய் வாழ்வைப் பெறும் பொருட்டும், அதை முழு நிறைவாகப் பெறும் பொருட்டும் வந்திருக்கிறேன்" என்றார். யோவான் 10 - 10

## புதிய சமாதானம்

இயேசு, "சமாதானத்தை உங்களுக்கு அளித்து விட்டுச் செல்லுகிறேன், என்னுடைய சமாதானத்தையே நான் உங்களுக்கு அளிக்கிறேன், உலகம் அளிப்பது போல நான் இதை உங்களுக்கு அளிக்கவில்லை, உங்கள் மனத்தில் கலக்கம் வேண்டாம், நீங்கள் மருளவும் வேண்டாம் என்றார். யோவான் 14 ; 27.

பவுல், "எல்லா அறிவாற்றலுக்கும் அப்பாலுள்ள தெய்வ சமாதானம் உங்கள் உள்ளத்தையும் உங்கள் மனத்தையும் கிறிஸ்து இயேசுவோடு இணைந்த வாறே இருக்கும் படி காத்துக்கொள்ளும்" என்றார்.

பிலிப்பியர் 4 ; 7

## புதிய விடுதலை

இயேசு கூறினார்; உங்கள் வாழ்க்கை என் வார்த்தையில் வேரூன்றியதாய் இருக்குமானல் மெய்யாகவே நீங்கள் என் சீடர்களாயிருப்பீர்கள். சத்தியத்தையும் அறிந்து கொள்ளுவீர்கள், அந்தச் சத்தியம் உங்களை விடுதலை பெற்றவர்களாக்கும் ஆகவே; மைந்தர் (இயேசு கிறிஸ்து) உங்களுக்கு விடுதலையளித்து விட்டால், நீங்கள் மெய்யாகவே விடுதலைபெற்றவர்களாவீர்கள்.

யோவான் 8 ; 31-33, 36:

பவுல் கூறினார்; இவ்வாறு நாம் விடுதலை பெற்றவர்களாய் வாழ வேண்டுமென்றே கிறிஸ்து நம்மை விடுவித்தார், — கலாத்தியர் 5 : 1

---

(26-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்குரிய செய்தியை யோவான் பெற்றுக் கொண்டார். பெற்றுக் கொண்டவர், அவருக்கு வாக்குக்கொடுக்கிறார்'... தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும், வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக ஆமென்.' (வெளி; 1:6.).

சத்தியம் ஒருபோதும் சத்தியத்துடன் முரண் படாது.

வெளிப்படுத்தின விசேஷம் 20-ம் அதிகாரம் நாம் கற்ற சத்தியத்திற்கு மாறாக முரணாக எதையும் போதிக்கவில்லை. அது முடியாத ஒன்று.

J. C. பெய்லி

## புதிய ஆற்றல்

பவுல் கூறினார்: கிறிஸ்து எனக்கு வலிமையளிப்பதால், எல்லாவற்றையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு.
நீங்கள் ஆண்டவரோடு இணைந்திருப்பதால், அவருடைய மிகுந்த ஆற்றலைப் பெற்று வலிமையுள்ளவர்களாயிருங்கள். பிசாசின் சூழ்ச்சிகளை எதிர்த்து நிற்கக் கூடியவர்களாகும்படி, கடவுள் அருளும் எல்லாப் படைக்கலங்களையும் அணிந்து கொள்ளுங்கள்.

பிலிப்பியர் 4 : 13 : எபேசியர் 6 : 10-11.

## புதிய தூய்மை

கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்களாயிருப்பவர்கள், தங்கள் பாவ இயல்பை அதன் இழிவான உணர்ச்சிகளோடும் விருப்பங்களோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்து விட்டார்கள். நாம் வாழ்வது தெய்வ ஆவியினாலேயென்றால், தெய்வ ஆவியினாலேயே ஆட்கொள்ளப்பட்டு நடப்போமாக. தெய்வ ஆவி தரும் கனியோ அன்பு, மகிழ்ச்சி, மன அமைதி, பொறுமை, பரிவு, நற்பண்பு' நாணயம், சாந்தம், தன்னடக்கம் என்பவை.

கலாத்தியர் 5 : 24-25: 22-23.

## புதிய மகிழ்ச்சி

பவுல் கூறுகிறார்: இப்பொழுதே நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் கடவுளோடு நமக்கு நல்லுறவு உண்டாயிருக்கிறது. ஆகையால் அவர் மூலமாகக் கடவுளை அக மகிழ்ச்சியோடு போற்றுகிறோம்.

றோமர் 5 : 11.

இயேசு கூறினார்: இதுவரையில் நீங்கள் என் பெயரால் எதையும் கேட்டதில்லை. உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெற வேண்டும். ஆகையால் கேளுங்கள், அப்பொழுது நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்.

யோவான் 16:23,

## கடவுளோடு ஒரு புதிய உறவு

பாருங்கள், நம் தந்தையார் நம்மிடம் கொண்டுள்ள அன்பு எவ்வளவு மேன்மையானது! அந்த அன்பு காரணமாகவே நமக்குக் கடவுளின் பிள்ளைகள் என்கிற பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் கடவுளின் பிள்ளைகளே, 1 யோவான் 3 : 1.
யார் யார் கடவுளின் ஆவியால் நடத்தப்படுகிறார்களோ அவர்களனைவரும் கடவுளின் மைந்தர்கள்... உங்களைக் கடவுளின் மைந்தர்களாக்கும் ஆவியைப் பெற்றிருக்கிறீர்கள்; அந்த ஆவியின் அருளால் நாம், '' அபா '' (அதாவது, அப்பா) என்று கூப்பிடுகிறோம், இவ்வாறு கூப்பிடும் போது, நாம் கடவுளின் பிள்ளைகளென்று நம்ஆவி உணர்த்தும் உண்மையை அந்த ஆவியானவர் தாமே உறுதிப்படுத்துகிறார்,

றோமர் 8 : 14-16

ஹென்றி மோஹன், ஊட்டி.

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The Voice of Truth—Speakers: Reggie

Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9 : 00to 9 : 15 P. M'
Fridays-7 : 45 to 8 : 00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker : Sunny David.

All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9 : 00 to 9 : 15 P. M.
Thursdays-9 : 00to 9 : 15 P. M.
Fridays-9 : 00 to 9 : 15 P. M.
Sundays-12 : 45 to 1 : 00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker : Joshua Gootam

All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2 : 30 to 2 : 45 P. M.
Tuesdays-2 : 30 to 2 ; 45 P. M.
Thursdays-2 : 30 to 2 : 45 P. M
Fridays-2 : 30 to 2 : 45 P. M
Saturdays-2 : 30 to 2 : 45 P. M.

**TAMIL** –The Way of Truth-Speaker : P. R. Swamy.

All correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5 : 30 to 5 : 45 P M.
Thursdays-6 : 45 to 7 : 00 P M.
Sundays-6 : 45 to 7 : 00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker : P. K. Varghese

All coresspondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala)
Tuesdays,3 : 45 to 4 : 00 P. M.
Fridays-3 : 45 to 4 : 00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Ch istian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

# வாசக அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

'திருமறை ஆசான்' உங்களுக்கு மாதா மாதம் ஒழுங்காக வந்து கொண்டிருக்கும் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறோம். ஒருவேளை வரத் தவறியிருந்தால் வராத மாதங்களைக் குறிப்பிட்டு தயவு செய்து எங்களுக்கு எழுதுங்கள். அனுப்பித் தருகிறோம்.

மேலும் உங்களுக்கு மாதா மாதம் ஒழுங்காக வந்து கொண்டிருக்கிறது என்றாலும் தயவு செய்து சிரமத்தைப் பாராமல் ஒரு அஞ்சல் அட்டை எழுதி எங்களுக்கு தெரிவியுங்கள்.

இந்த வேண்டுகோளை ஏற்று இரண்டில் ஏதாவது ஒன்றைச் செய்யாமல் இருப்பவர்களுக்கு இதழ் அனுப்புவதை நிறுத்தி விடலாமா என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஏனெனில் இதழ் வேண்டுமென்று ஆர்வத்தோடு கேட்கிற அன்பர்களுக்கு அனுப்பித் தர எங்களிடம் அதிகப் பிரதியில்லை.

தயவுசெய்து வருகிறது அல்லது இல்லை என்று இரண்டு வரி எழுதி ஒத்துழைப்புத் தர கிறிஸ்தவ அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம். இது இரண்டாம் & இறுதி அறிவிப்பு.

Edited and Published by E. Z. Selvanayagam and Printed by
Sri. Vela E. V. Arasamanickam, at Vela Printers, Erode-638 001.
Phone : 74878

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN,
2, Manal Medu Street,
ERODE-638 002.